# மெட்ரோ பணிமனையில் சோலார் நிலையம் துவக்கம்



சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின், கோயம்பேடு பணிமனையில், 1.2 மெகா வாட் சூரியசக்தி மின் உற்பத்தியை, தொழில் துறை அமைச்சர், எம்.சி.சம்பத் நேற்று துவக்கி வைத்தார். உடன், மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர், பங்கஜ்குமார் பன்சால்.

சென்னை, ஜூலை 5–

கோயம்பேடு மெட்ரோ ரயில் பணிமனையில், 1.2 மெகா வாட் திறன் கொண்ட, சூரிய மின் சக்தி நிலையத்தை, அமைச்சர், எம்.சி.சம்பத் துவக்கி வைத்தார்.

சென்னை மெட்ரோ ரயில் பணிமனை, கோயம்பேடில் உள்ளது. பணிமனையில், மின் சிக்கனம் மேற்கொள்ள ஏதுவாக, 1.2 மெகா வாட், சூரிய மின் சக்தி நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

இத்துடன், மெட்ரோ ரயில் பயணியர் வைத்திருக்கும் டிராவல் கார்டில், வாகன கட்டணம் செலுத்தும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மின்நிலையம் மற்றும் டிராவல் கார்டில், வாகன கட்டணம் செலுத்தும் திட்ட துவக்க விழா, கோயம்பேடில், நேற்று இரவு நடந்தது.

விழாவுக்கு, சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர், பங்கஜ்குமார் பன்சால் தலைமை வகித்தார்.

தொழில் துறை அமைச்சர், எம்.சி.சம்பத், சூரிய மின்சக்தி நிலையத்தையும், டிராவல் கார்டில், வாகன கட்டணம் செலுத்தும் வசதியையும் துவக்கி வைத்தார்.

டிராவல் கார்டில், வாகன கட்டணம் செலுத்தும் வசதி, முதல் கட்டமாக, கோயம்பேடு, அண்ணாநகர் கிழக்கு, திருமங்கலம், எழும்பூர், வடபழனி, ஆலந்துார், வண்ணாரப்பேட்டை, மண்ணடி, உயர் நீதிமன்றம், அரசினர் தோட்டம், மற்றும் எல்.ஐ.சி., ஆகிய, 11 நிலையங்களில் அமல்படுத்தப்படுகிறது.

படிப்படியாக, மற்ற நிலையங்கிலும் இவ்வசதி அமல்படுத்தப்பட உள்ளது.